
# திருத்தந்தை
# புனித 2ஆம் யோவான் பவுல்



## “கூடுவோம்... கொண்டாடுவோம்”
## VBS - 2024

தொகுப்பு : வேதியர். பேரா. தி.ம. சந்தியாகு

வெளியீடு : விவிலியப் பணிக்குழு,
முப்பணி மையம், திண்டிவனம்

# ஆசியுரை

இறைவார்த்தையை வாழ்வாக்கும் வழிமுறைகளை முறையாகக் கற்பிக்கும் விடுமுறை விவிலியப் பள்ளியை (VBS) தங்கள் தலத் திரு அவையில் சிறப்பாக நடத்தும் அருள்பணியாளர்களே, ஆசிரியப் பெருமக்களே, மாணவச் செல்வங்களே நல்வாழ்த்துக்கள்! ஒவ்வோர் ஆண்டும் VBS வகுப்புகள் நடத்தும்போது ஒரு புனிதரின் வரலாற்றைக் கற்பித்து, அவரது வாழ்விலிருந்து பாடமாக ஏற்க வேண்டியவற்றை உள்வாங்கிக் கொள்ளவும், அப்புனிதரது பரிந்துரையால் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும் தமிழக விவிலியப் பணிக்குழு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் நல்ல வழக்கமாகும்.

அந்த வரிசையில் இந்த ஆண்டு திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்களது வரலாற்றை VBS வகுப்புகளில் ஒன்பது நாள்களுக்குக் கற்பிக்க முயற்சி எடுத்துள்ளோம். ஒவ்வொரு நாளுக்குரிய பாடத்தையும் முக்கியத் தலைப்புகளின் அடிப்படையில் அமைத்துள்ளோம். புனிதர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். 264ஆவது திருத்தந்தையாகப் பொறுப்பேற்று 26 ஆண்டுகள் பணியாற்றியவர். இருமுறை (1986, 2002) நமது இந்திய நாட்டிற்குத் திருப்பயணம் மேற்கொண்டு நமது அருள் வாழ்வை மேம்படுத்தியவர்.

இவரது வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள், 'இறைவன் தமது திருவுளத்தின்படி இவரை எப்படியெல்லாம் வழிநடத்தி வந்துள்ளார்' என்று வியப்புற வைக்கின்றன. இவர் ஏராளமான நூல்கள், மறைக்கோட்பாட்டு ஆணவங்கள், திருத்தூது மடல்களை எழுதி, காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப அனைத்துலகத் திரு அவையை வழிநடத்தி வந்துள்ளார். மிக அதிகமாக உலக நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு மேய்ப்புப்பணி ஆர்வத்தை வெளிப்படுத்தியதால் 'திருப்பயணத் திருத்தந்தை' என்று இவர் அழைக்கப்படுகிறார். இவர் இளையோர்மீது ஈடில்லா அக்கறை கொண்டவர் இவரது வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் இறை இரக்க விழா நாளில் நடைபெற்றுள்ளதால் இவர் 'இறை இரக்கத்தின் திருத்தந்தை' என்றும் போற்றப்படுகிறார். இந்த ஆண்டு VBS இவரைப் பற்றி அறிந்து கொள்வது மிகுந்த பயனுள்ளதாகும்.

VBS வகுப்புகளில் இவரைப் பற்றிக் கற்றுக்கொள்வதோடு அல்லாமல் இவரைப் பின்பற்றி வாழவும் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இவரது எடுத்துக்காட்டான வாழ்வு நம் ஒவ்வொருவருக்கும் நமது சமய, சமூக, ஆன்மிக வாழ்வில் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையட்டும். VBS பணிகளுக்கான முன்முயற்சிகளை எடுத்துவரும் தமிழக விவிலியப் பணிக்குழுவின் செயலர் **அருள்பணி. ச. ஸ்தனிஸ்லாஸ்** அவர்களுக்குப்

பாராட்டுகள். இந்நூலினைச் சிறப்பாகத் தொகுக்கும் பணியைச் செய்துள்ள **வேதியர். பேரா. தி.ம. சந்தியாகு,** இதனை அச்சேற்றி கணனியாக்கம் செய்த **திருமதி. ஸ்டெல்லா, திருமதி. சங்கீதா** ஆகியோருக்கும் வெளியிடும் முப்பணி மைய இயக்குநர், **அருள்பணி. A. ஜான் பிரிட்டோ பாக்கியராஜ்** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றிகள்.

ஆசிரியப் பெருமக்கள், இந்நூலில் கொடுத்துள்ளபடி திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்களது வரலாற்றைப் படித்து தங்களுக்கென்று நல்ல மதிப்பீடுகளை உள்வாங்கிக் கொண்டு அவற்றின்படி நம்முடைய குழந்தைச் செல்வங்களைப் பயிற்றுவிக்க அவர்களை உளமார வாழ்த்துகின்றேன். இனிய உலகு உருவாக இணைந்து உழைப்போம்.

*இறைவார்த்தைப்பணியில் என்றும் அன்புடன்*

**மேதகு ஆயர். A. ஸ்டீபன்**
*ஆயர், தூத்துக்குடி மறைமாவட்டம்*
*தலைவர், தமிழக விவிலியப் பணிக்குழு*

திண்டிவனம்
13.02.2024

# உள்ளுறை


| | |
|---|---|
| முதல் நாள் | - முன்னுரை, தோற்றம் |
| இரண்டாம் நாள் | - இளம்பருவமும் இறைத்திருவுளமும் |
| மூன்றாம் நாள் | - கரோல் வாழ்வில் கடும் சோதனைகள் |
| நான்காம் நாள் | - அழைத்தலும் அர்ப்பணமும் |
| ஐந்தாம் நாள் | - பிறரைக் கவர்ந்த பேராயர் பணிகள் |
| ஆறாம் நாள் | - எழுத்துப் பணிகளில் இமயம் தொட்ட திருத்தந்தை |
| ஏழாம் நாள் | - திருப்பயணங்களின் திருத்தந்தை |
| எட்டாம் நாள் | - வரலாற்றுச் சாதனையாளர் |
| ஒன்பதாம் நாள் | - மறைவும் மாட்சியும் |




# விடுமுறை விவிலியப் பள்ளி – 2024
## (திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல்)

### முதல் நாள்

**முன்னுரை – தோற்றம்**

தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் கத்தோலிக்கக் கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு ஆண்டுதோறும் மே 1 முதல் 10 முடிய உள்ள நாள்களில் நடத்தப்படும் விடுமுறை விவிலியப் பள்ளி ஒரு மாபெரும் கொடை. ஏனெனில் யு.கே.ஜி.முதல் 11ஆம் வகுப்புவரை பயிலும் பிள்ளைகளுக்கு ஏறக்குறைய 12 ஆண்டுகளாக இப்பள்ளியில் பயின்று ஆசிரியர் களானவர்களைக்கொண்டே கற்பிக்கப்படும் இந்த விவிலியக் கல்வி மிகவும் பயனுள்ள விதத்தில் அமைந்துள்ளதை அனைவரும் அறிவர்.

ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட விவிலியப் பாடத்திட்டத்துடன் இணைத்து துணைப்பாடத்திட்டமாக ஒரு புனிதரைப் பற்றிய வரலாறும் எடுத்துரைக்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை ஏராளமான புனிதர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, அவர்களது வாழ்வில் காணப்பட்ட பல்வேறு சிறப்புப் பண்புகள் மாணவர்களது வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த ஆண்டு இந்தியாவின் முதல் பொதுநிலைப் புனிதரான மறைச்சாட்சி தேவசகாயம் அவர்களது வாழ்வுமுறை கற்பிக்கப்பட்டு ஏராளமான மாணவர்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டு தனது வாழ்வாலும் பணிகளாலும் தனித்தடம் படைத்து, சாதனையாளராகத் திகழ்ந்த திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களது வாழ்க்கை வரலாறு கற்பிக்கப்பட உள்ளது என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திருஅவையில் திருத்தந்தையர்**

இறையாட்சியின் நாயகராம் நம் மீட்பர் இயேசு, தனது நிறைவு நோக்கிய பயணத்தில், தமது பணிகள் விரைவாகவும் நிறைவாகவும் நடைபெற திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் தங்களது தலைவர் இயேசுவின் வழிகாட்டலில் அவரது மறையுடலாம் திரு

அவையைத் தங்களது தலைமைத்துவம் நிறைந்த, அர்ப்பணம் மிகுந்த வழிநடத்துதலால் ஒளிர்வித்தனர். அவர்களில் முதலிடம் பெற்றவர் திருத்தூதர் பேதுரு. அவரைத்தான் இயேசு “உன் பெயர் பேதுரு, இந்தப் பாறையின்மேல் என் திரு அவையைக் கட்டுவேன்” (மத் 16:18) என்றும் “என் ஆடுகளைப் பேணி வளர்” (யோவா 21:17) என்றும் கூறி தம் திரு அவைக்குத் தலைவர் ஆக்கினார். எனவே திருத்தூதர் புனித பேதுருதான் முதல் திருத்தந்தை ஆவார். அவரில் தொடங்கி இந்த ஆண்டு நாம் ‘கூடுவோம், கொண்டாடுவோம்’ விடுமுறை விவிலியப் பள்ளிக் கல்விக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் வரை திருத்தந்தையராக 263 பேர் பணிபுரிந்துள்ளனர். இவரது வாழ்க்கையைப் பற்றி இந்த ஆண்டு விரிவாகக் கற்றுக் கொள்வோம். கற்றுக்கொண்டதை,

“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்ற வள்ளுவரின் கூற்றுப்படி, நாம் திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுலின் எதிர்நோக்கை நிறைவேற்றும் இலக்கைக் கொண்டிருப்போம்.

கத்தோலிக்கத் திருஅவையின் வரலாற்றில் மிகக் குறைந்த காலமே வெறும் 33 நாள்களே திருத்தந்தையாக பணிபுரிந்து, ‘புன்னகையின் திருத்தந்தை’ என்று அழைக்கப்பட்ட திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் 28.09.1978 அன்று இறையடி சேர்ந்தார் என்பது அனைத்துலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவரைத்தொடர்ந்து 264ஆவது திருத்தந்தையாக யார் பொறுப்பேற்கப் போகிறார் என்பது உலகம் முழுவதையும் எதிர் நோக்கியிருந்த இறுக்கமான வினா ஆகும். அதற்கு விடையாக 1978ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் போலந்து நாட்டைச் சேர்ந்த ‘கரோல் ஜோசப் வோய்த்திவா’ திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பது இனிக்கும் செய்தியாக வெளிவந்தது.

## இத்தாலிக்கு வெளியில் இருந்து இளம் திருத்தந்தை ஒருவர்

பெரும்பாலும் உரோமை ஆயராகவும் உலக கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகவும் விளங்கும் திருத்தந்தை இத்தாலி நாட்டைச் சேர்ந்தவராகவே இருப்பது வழக்கம். ஏனெனில் அப்படித் தேர்வு செய்யப்படுபவர் உலகிலேயே மிகச்சிறிய நாடாகிய வத்திக்கானின் அதிபராகவும் இருப்பார். ஆனால் 1522ஆம் ஆண்டு திருத்தந்தையாகப்

பொறுப்பேற்ற இத்தாலி நாட்டைச் சாராத திருத்தந்தை ஆறாம் ஏட்ரியனுக்குப் பிறகு இத்தாலியர் அல்லாதவர் ஒருவர் 455 ஆண்டு களுக்குப் பிறகு பொறுப்புக்கு வந்த முதல் திருத்தந்தை, திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். இவரது வாழ்க்கை வரலாற்றை நாம் சரியாகத் தெரிந்துகொள்வது இந்த ஆண்டு விடுமுறை விவிலியப் பள்ளிக் கல்விக்கு மிகவும் பொருத்தமானதும் அவசியமானதுமாகும்.

### திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்களின் குடும்பச் சூழலும் தோற்றமும்

போலந்து நாட்டில் கரோல் இராணுவ நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றினார். எமிலியா என்ற அழகியைத் திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியருக்கு முதல் குழந்தையாக எட்வர்டு பிறந்தார். இரண்டாவது குழந்தையாக 1920ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி பிறந்தவர்தான் கரோல் ஜோசப் வோய்த்திவா இவர்தான் பிற்காலத்தில் திருத்தந்தை ஆனவர். இவரது செல்லப்பெயர் லோலக். மூன்றாவதாகப் பிறந்த பெண்குழந்தை தாயின் வயிற்றிலேயே இறந்து பிறந்தது. தாயும் உடனே இறக்க வேண்டியதாயிற்று. அப்போது வோய்த்திவாவுக்கு வயது ஒன்பது.

## இரண்டாம் நாள்

### இளம் பருவமும் இறைத் திருவுளமும்

கரோல் ஐந்து வயதில் ஆரம்பப்பள்ளிக்குச் சென்று, நல்லொழுக்கத்துடனும் அமைதியுடனும் நற்பண்புகளுடனும் வளர்ந்தார். அவரிடம் இறைபக்தி நிரம்பியிருந்தது. தனக்கு 9 வயது ஆனபோது ஆண்டவரை முதல்முறையாக உட்கொண்டார் (First Holy Communion) அந்த வருடம்தான் அவரது தாய் இறந்தார்.10ஆம் வயதில் இவர் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றார்.

இவருக்கு 13 வயது ஆனபோது மருத்துவராகப் பணிபுரிந்த இவரது அண்ணன் எட்வர்டு ஒரு தொற்றுநோய் தாக்குதலால் இறந்துபோனார்.

### பள்ளிப் படிப்பும் - பண்புகளும் பணிகளும்

கரோல் 18 வயதிற்குள் தமது சொந்த ஊரான வாடோவுக்கில் உயர் நிலைக்கல்வியைச் செம்மையாகக் கற்று முடித்தார். இவர் பள்ளிப்படிப்பில்

முதல் இடம்; ஆலயப் பணிகளில் ஆர்வம்; மூன்று ஆண்டுகள் பீடச் சிறுவர்களின் தலைவர் பொறுப்பு வாய்ந்த பணி, செபமாலைக் குழுவின் சிறப்பு மிகுந்த வழிகாட்டி.

இவர் நல்ல கால்பந்தாட்ட வீரர், நீச்சல், பனிச் சறுக்குதல், உறைபனியில் நடத்தல், மலையேற்றம் போன்றவற்றில் தமது திறமைகளை வளர்த்துக்கொண்டார்.

இயல்பாகவே இவரிடம் காணப்பட்ட பணிவு, பக்தி போன்ற நற்பண்புகள் இவருக்கு நற்பெயரை ஏற்படுத்தின. இவற்றைக் கண்ட வோடேவைங் பேராயர், ‘‘கரோல் (லோலக்) ஒருநாள் அருள்பணியாளராக வருவான்; அப்படி வந்தால் திரு அவை மிக அதிகமான நன்மைகளைப் பெறும்’’ என்று அந்த ஊர் பங்குத் தந்தையிடம் கூறினார்.

**நாடக நடிகர் மற்றும் எழுத்தாளர்**

இளம் வயதிலேயே லோலக் மிகச்சிறந்த நாடக எழுத்தாளராகவும், நடிகராகவும் விளங்கினார். சில நேரங்களில் உதவி இயக்குனராகவும் பொறுப்பேற்றுச் செயல்பட்டு பாராட்டுதல்களைப் பெற்றார். அதற்கு உதவியாக தாம் தமது தாய்மொழியான போலியம் மட்டுமல்லாமல் இத்தாலியம், பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம், எசுப்பாணியம், குரோவாகியம், எஸ்பெராஸ்டோ, போர்த்துக்கீசியம், ரஷ்யன், உக்குரேனியம், பண்டைய கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளையும் கற்று நல்ல புலமை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது நாடகங்கள்,

1. அந்நிய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பானவையாகவும்
2. மக்கள் தங்கள் சக்தி மற்றும் திறமைகளை உணர்ந்து செயலாற்ற விழிப்புணர்வு ஏற்படுத்துபவையாகவும் அமைந்திருந்தன.
3. புகழ்பெற்ற நாடகங்களை மொழிமாற்றம் செய்து அரங்கேற்றி மக்களின் உணர்வுகளுக்கும் வாழ்க்கைப் போராட்டத்திற்குமான நம்பிக்கையூட்டும் கருத்துகளை வெளிப்படுத்தினார்.
4. 1939 டிசம்பரில் இவர் எழுதிய முதல் நாடகம், ‘தாவீது’, இரண்டாம் ஆண்டு இளவேனிற்காலத்தில் ‘யோபு’, கோடைக்காலத்தில் ‘எரேமியா’ இவற்றில் எளிமையான வசனம், ஆழமான கவித்துவம் நிறைந்த உரையாடல், தனிநபர் புலம்பல் நடிப்பு போன்றவை பிறர்பாராட்டும் விதத்தில் இடம் பெற்றிருந்தன.

5. நாடகத்துறையில் ஏராளமான தடைகள், கண்காணிப்புகள் (குற்றம் கண்டுபிடிக்க) நிறைந்த சூழலில் 1. அடக்குமுறைகள், 2. பெண்களுக்கு எதிரான வன்முறை, 3. அநீதிகள், 4. வன்முறை, 5. அரசியல், 6. ஒற்றுமைக் குறைவு போன்றவற்றுக்குத் தீர்வுகாணும் விதத்தில் இவரது நாடகங்கள் அமைந்திருந்தன.

6. வோய்த்திவா 1939 நவம்பரில் திரு.மிக்னாங்லோ கோட்லர்சைக்கு எழுதிய கடிதத்தில் “நாடக அரங்குகள் தேசிய உணர்வுகள் பொங்கியெழும் ஆலயங்களாக இருக்கின்றன” எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நாடகத்துறையில் ஈடுபாடு சார்ந்த அரும்பண்பு, நம் திருத்தந்தை இளம் வயதில் உயிர்த்துடிப்போடு செயல்படத் துணைநின்றது.

பல்வேறு பணிகளுக்கிடையிலும் லோலக் குறிப்பிட்ட நேரங்களில் கோவிலுக்குச் சென்று, அமைதியில் இறைவனோடு உரையாடத் தவறுவதில்லை. ஆழ்கடலின் அமைதியும் தியான மனநிலையும் அவருக்கே உரியவை. அதே வேளையில் அன்னை மரியாமீது அளவற்ற அன்பும் பற்றும் கொண்டிருந்தார். எப்போதும் இறைவேண்டல் செய்வதிலும் தவறுசெய்யாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலும் கவனமாயிருந்தார்.

## மூன்றாம் நாள்

### கரோல் வாழ்வில் கடும் சோதனைகள்

1938ஆம் ஆண்டு கிராக்கோவ் நகரில் உள்ள ஐசுலோனியன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில ஆரம்பித்தார். மெய்யியல் துறையில் சேர்ந்தார். போலந்து இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட அவர் நாளடைவில் போலந்து மொழியில் கவிதைகளும் நாடகங்களும் எழுதி நடித்தார். 1939ஆம் ஆண்டு செப்டம்பர் முதல்நாள் ஹிட்லர் போலந்து நாட்டைத் தாக்கிக் கைப்பற்றி மக்களை அடிமைப்படுத்தினார். செர்மானிய அதிகாரிகளால் கரோல் கல் உடைக்கும் வேலைக்கு அனுப்பப்பட்டார். கடுங்குளிரிலிருந்து தப்பிக்க ஒருவித எண்ணையை முகத்தில் பூசிக்கொண்டும் முரட்டுத்துணி ஒன்றைக் கட்டிக்கொண்டும் கல் உடைப்பார். வேலை கடினமானது. பேனாபிடித்த கைகள் சம்மட்டிபிடித்து அடித்தன. பிஞ்சுக் கைகள் பாறையாய் மறத்துப் போயின. இவ்வளவு கடின

வேலைக்கு இடையிலும் கரோல் தனது மறைக்கல்வியையும் பட்டப் படிப்பையும் தொடர்ந்து படித்தார். பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்பட்டன. எனினும் தன் பணியைச் செய்தவாறே தன் படிப்பையும் தொடர்ந்தார். மாணவர்களும் பேராசிரியர்களும் அடித்துத் துரத்தப் பட்டனர். சிலர் கைதும் செய்யப்பட்டனர். கல்வியைத் தொடர முடியாத நிலை ஒருபுறம், தம் தந்தையைக் காப்பாற்ற ஆகும் செலவுத் தொகையைச் சம்பாதிக்க கல்லுடைக்கப்போவது மறுபுறம் என கரோலின் சூழல் கவலை மிகுந்ததாய் அமைந்தது. மாலை வேளையில் கல்வி கற்கத் தனியார் நிறுவனங்களுக்குச் செல்ல வேண்டியது இன்னொரு புறம்.

### சோதனையில் கற்றுக்கொண்ட சுந்தரக் கருத்துகள்

#### 1. தொழிலாளர்மீது தனிப்பரிவும் பாசமும் பிறந்தது

கடின உழைப்பைக் கற்றுக்கொடுக்கும் கல்விக்கூடமாக கல் உடைக்கும் தொழிலகம் அமைந்தது. உழைப்பாளர்களின் நலனுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார். வேலை செய்வதற்கு ஏற்ற சூழல், சமய, கலாச்சாரத் தேவைகள், மனமகிழ்வு வாய்ப்புகள் இவை அனைத்தும் தொழிலாளருக்குத் தரப்பட வேண்டும் எனப் போராடினார்.

#### 2. இளையோர் எதிர்காலத் தூண்கள்

தம்மைப்போன்ற இளைஞர்களோடு சேர்ந்து கடுமையாக உழைக்க வேண்டிய சூழலில் வளர்ந்ததால் இளைஞர்கள்மீது அளவற்ற அனுதாபமும் பரிவும் கொண்டிருந்தார். இளைஞர்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றவும் எதுவரினும் அஞ்சாது வாழவும் இளையோருக்குக் கற்றுத் தரவும் பேராவல் கொண்டிருந்தார். ஏனெனில் அவர்களை எதிர்காலத் தூண்களாக மதித்துப் போற்றினார்.

### தந்தையின் இறப்பும் தாங்கவொண்ணாத் தவிப்பும்

தமது 21ஆம் வயதில் கல்குவாரியில் வேலை முடித்து வீட்டுக்குத் திரும்பினார் கரோல். படுத்திருக்கிறார் தந்தை எனக் கருதி உணவுகொடுக்க தந்தையைத் தட்டி எழுப்பிய கரோலுக்குக் கடும் அதிர்ச்சி. ஏனெனில் தந்தை பிணமாகக் கிடந்தார். சொல்ல முடியாதத் துன்ப வெள்ளம் அவரைச் சூழ்ந்தது. உறவு என்று சொல்ல கரோலுக்கு யாரும் இல்லை. தந்தையின் உடலருகே முழந்தாளிட்டு இரவெல்லாம் கண்விழித்து இறைவேண்டல் செய்தார்.

சிலநாள்கள் தன் நண்பர் கிரைன்ஸ்கியின் வீட்டில் தங்கியிருந்த கரோல் மீண்டும் தன் வீட்டிற்கே சென்றுவிட்டார். தங்கை தாயின்

வயிற்றிலேயே இறந்துவிட, தாயும் தன் கண்முன்னே இயற்கை எய்த, நம்பிக்கைப் பேரொளியாய் இருந்த தனயன் எட்வர்டும் இறப்பெய்திட, தந்தையும் இறைவனடி சேர்ந்தார் என்ற சூழலில் தனிமரமாய் நின்ற கரோல் 'உழைப்பு' என்ற ஒற்றைக் கருத்தினிலே முழு நேரத்தையும் செலவழித்தார். அவரது உழைப்பைக் கண்ட முதலாளி வெடி வைத்துத் தகர்க்கும் பிரிவில் கரோலுக்கு வேலையைக் கொடுத்தார். 1941–1942 ஆண்டுகளில் க்ரோகோவ் நகருக்கு அருகே உள்ள தொழிற்சாலைக்குச் சென்று தண்ணீர் சுத்திகரிப்புப் பிரிவில் வேலை செய்தார் கரோல்.

### பிறர்நலப் பணிகள்

தொழிற்சாலையில் சுண்ணாம்பு உள்பட வேதிப்பொருள்களைச் சுமக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது வேதிப்பொருள்களை அதிகம் சுவாசிப்பதால் மக்கள் நுரையீரல் சுவாசப் பிரச்சினை, வயிறு வீங்குதல் போன்றவற்றிற்கு ஆட்பட்டு அவதியுற்றார்கள். இதனைக் கண்டு மனம் பதைத்த வோய்த்திவா தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தேவையான ஓய்வு, மருத்துவ உதவி, சுகாதாரம் போன்றவற்றிற்காக நிர்வாகத்துடன் போராடி வெற்றிபெற்றார்.

### விபத்தில் பெற்ற வியத்தகு அழைப்பு

ஒருநாள் தொழிற்சாலையில் வேலை முடித்துவிட்டு வீட்டுக்குச் செல்லும்போது ஏற்பட்ட விபத்து ஒன்றில் பாதிப்புக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்ந்து மருத்துவ உதவிபெறும்போதுதான் தன்னைக் கடவுள் **அருள்பணியாளராக அழைப்பதாக உணர்ந்து,** அதற்கான படிப்பை மேற்கொண்டார். ஏனென்றால் தன்னைப் போன்று பெற்றோரின்றித் தவிக்கும் இளையோரைத் தாங்கிக் காப்பாற்றும் எண்ணம் கரோலுக்கு மேலோங்கியது. குருத்துவப் பயிற்சி நிலையங்கள் 2ஆம் உலகப்போர் காரணமாக மூடப்பட்டிருந்ததால் இறையியல் கற்றுக்கொடுக்கும் இடங்களை நாடிச்சென்று குருத்துவப் பயிற்சியைத் தொடர்ந்தார்.

## நான்காம் நாள்

### அழைப்பில் நிலைத்த அர்ப்பணிப்பு

பிற்காலத்தில் குருத்துவம் என்ற திருப்பட்டமும், அந்த அருளடையாளத்தின் முழுமையான ஆயர்நிலையையும், அதனினும் பன்மடங்கு உயர்ந்த திருத்தந்தை நிலையையும் அடைந்த கரோல்

வோய்த்திவா மருத்துவமனையில் பெற்ற தன் குருத்துவ அழைப்பு அனுபவத்தை ஒருபோதும் மறந்ததேயில்லை.

1942ஆம் ஆண்டு அருள்பணியாளர் ஆகும் தம் கனவைச் சுமந்து பயணித்த கரோல் வோய்த்திவாவின் இலக்கில் இம்மியளவும் முன்னேற இயலாவண்ணம் இடர்கள் ஏற்பட்டன. அது இரண்டாம் உலகப்போரின் உச்சக்கட்டக்காலம். பல குருத்துவப் பயிற்சியகங்கள், கல்லூரிகள் மூடப்பட்டன. இருந்தாலும் தம் இலக்கைக் கைவிடாமல் முயற்சித்தார் வோய்த்திவா. இந்நிலையில் பேராயர் ஆதாம் ஸ்டேபன் சபியாவினால் நடத்தப்பட்ட கிளான்டெஸ்டின் உயர் குருத்துவக் கல்லூரி க்ராக்கோவில் இருந்தது. அதில் 1942இல் இணைந்து படித்தார்.

இருந்தபோதிலும் 'விதி விரட்டியடிக்கும்' என்ற கிராமச் சொலவடைக்கேற்ப, க்ராக்கோவ் நகரை செர்மனி போர்ப்படை ஆக்ரமித்தது. 1944ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் நாள் 15 வயது முதல் 50 வயதுவரையுள்ள அனைவரையும் கைதுசெய்து சிறையிலடைக்க செர்மன் போர்த்தளபதி கட்டளையிட்டான். இந்தச் சிறைப் பிடிப்பிலிருந்து தப்பிக்க மாணவர்கள் மறைவான இடங்களை நோக்கித் தப்பிச் சென்றனர். அப்போது எங்கு தங்குவதென்று அறியாமல் தவித்தனர். அவர்களை அம்மறைமாவட்ட ஆயர் தம் இல்லத்தில் மறைவாக ஓர் அறையில் தங்க வைத்திருந்தார். அது 18 மாதங்கள் நீடித்தது. அங்கும் குருத்துவக் கல்வியைக் கற்றுக்கொள்வதில் வோய்த்திவா ஆர்வம் காட்டினார்.

**தடைகள் உடைக்கப்பட்டன**

இச்சமயத்தில் இரஷ்யா தனது பொதுவுடைமைச் சிந்தனைகளை மக்கள்மீது திணித்தது; மறைக்கல்வி மன்றங்களைத் தடைசெய்தது. சமயம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் பயிற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டது. இருப்பினும், 'உடைக்க உடைக்க சிதறிப் பரவும்' என்ற கருத்திற்கேற்ப தாக்குதல்களுக்கு உட்பட்ட மறைக்கல்வி மன்றங்கள் பலவாகப் பரவி விரிந்தன. வோய்த்திவா தாம் சந்தித்த போர்க் காட்சிகள், சவால்கள், துயரங்கள், ஏமாற்றங்கள், இழப்புகள், நம்பிக்கைகள், முன்னேற்றங்கள் அனைத்தையும் எழுச்சிமிக்க கவிதைகளாக்கியிருந்தார்.

போர்கள் முடிந்தன; புதுயுகப் பூபாளம் ஒலித்தது. குருத்துவக் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட்டன. வோய்த்திவா தனது இறையியல் கல்வியை செகல்லோனியன் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து படித்துக் குருத்துவத் திருநிலைப்பாட்டிற்கு முன்னேறினார்.

### அருட்பணியாளர்முதல் பேராயர் வரை

1946 நவம்பர் முதல்நாள் அனைத்துப் புனிதர்களின் திருநாளன்று கரோல் வோய்த்திவா குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். இவரிடம் விளங்கிய அறிவுத் திறனைக் கண்ட கர்தினால் சபியேகா இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அதே மாதத்தில் இவர் இறையியலில் முனைவர் பட்டம் பெற்ற இடத்திற்கே (உரோம்) இவரை உயர்கல்வி பெற அனுப்பிவைத்தார்.

1948 வரை உரோமில் பயின்ற கரோல் வோய்த்திவா அங்கு ஹாலந்து, பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் வாழ்ந்து, புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் பணியாற்றிய புனித சிலுவை ஜான் செய்த மேய்ப்புப் பணிகளைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டு முனைவர் பட்டத்தைப் பெற்றார். பின்னர் போலந்து திரும்பியவர் க்ராக்கோவுக்கு அருகில் உள்ள நியோஹோவிக் பங்குப் பணியாளராக நியமிக்கப் பட்டார். பின்னர் க்ராக்கோ அருகில் புனித புளோரினிலும் பணிபுரிந்தார். சுமார் 200கி.மீ. தூரம் நடந்தே சென்று மூத்த குருவுக்கு உதவிகள் புரிந்தார்.

பின்னர் 1951 வரை பல்கலைக்கழக நெறியாளராகத் திகழ்ந்தார். அப்போது இவர் தத்துவயியல் மற்றும் இறையியல் படிப்பை மீண்டும் தொடர்ந்தார்.1954ஆம் ஆண்டு போலந்து நாட்டின் தலைசிறந்த பல்கலைக்கழகமாகிய லப்ளின் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அதே நேரத்தில் க்ராக்கோ நகரக் குரு மாணவர்கள் இல்லத்திலும் அறநெறி – இறையியல் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

இவ்வளவு சிறப்புக்குரிய கரோல் வோய்த்திவா 1958ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பயஸ் அவர்களால் க்ராக்கோவ் உயர்மறை மாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப் பட்டார். பின்னர் பேராயர் யூஜினிஷ் பாசிக் இவரை 28.09.1958ல் க்ராக்கோவில் உள்ள வாவெல் பேராலயத்திற்கு உரியவராகத் நியமனம் செய்தார்.

பல்வேறு சிறப்புப் பணிகளில் தம்மை முன்னிறுத்திக்கொண்ட துணை ஆயர் வோய்த்திவா 13.01.1964ல் க்ராக்கோவ் மற்றும் சப்ஸ்செக்கெண்ட்லிக்குப் பேராயராக திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் உயர்த்தப்பட்டார்.

## ஐந்தாம் நாள்

**பிறரைக் கவர்ந்த பேராயர் பணிகள்**

பேராயராக க்ராக்கோவ் மறைமாவட்டத்தில் பணியாற்றிய கரோல் வோய்த்திவாவின் எளிய வாழ்வும் தந்தைக்குரிய அன்போடு உதவுகிற மனமும் எல்லாரையும் கவர்ந்தது. மேலும் உரிமைகளைப் பெற அரசோடு வாதாடுவதில் அவருக்கு இருந்த துணிச்சல், அரசு நேர்மை தவறிச் செயல்பட்டபோது அவர் எழுப்பிய கண்டனக்குரல், மனித மாண்பிற்காகப் போராடிய மன ஆற்றல் ஆகியவை அவரை மிகச்சிறந்த பேராயராகத் தரம் பிரித்துக்காட்டின.

இவரது செயல்திறனையும் முன் அனுபவங்களையும் நன்கு கண்டுணர்ந்த உரோமைத் திருஅவை, வரலாற்றில் திருப்புமுனையாகத் நிகழ்ந்த 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் (1962–1965) முழு ஈடுபாட்டுடன் பங்குகொள்ள கரோலுக்கு நல்வாய்ப்பினை அளித்தது. இவர் பார்வையாளராகப் பங்கேற்ற பாட்ரீக்கீகன் திருச்சபை என்ற கொள்கைத் திரட்டை உருவாக்கிய முக்கியமானவர்களில் தனி இடம் பெற்றார். தம் பணிகளில் பொதுநிலையினருக்கு முக்கியத்துவம் அளித்தார். மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் ஒன்றான “இன்றைய உலகில் திருச்சபை” என்னும் ஏட்டினைத் தொகுக்கும் புதிய பொறுப்பு பேராயருக்கு வழங்கப்பட்டது. அதனையும் சிறப்பாக முடித்திருந்த நிலையில் அதே திருத்தந்தை 6ஆம் பவுல் இவரை 26.06.1967 அன்று கர்தினாலாக உயர்த்தினார். இவரது முன்னெடுப்பில் ஆயர்கள் ஒன்றுகூடல்கள் ஐந்து நடைபெற்றன.

**கர்த்தினாலாக கனிவுமிக்க பணிகள்**

காலத்தின் அறிகுறிகளை இவர்நன்கு அறிந்து பல்வேறு சிறப்புப் பணிகளை முன் மொழிந்தார்: அகில உலக ஆயர் பேரவைகளில் இவருக்குப் பணி வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. அவற்றில் தம் தனிப்பெரும் முயற்சியால் முத்திரை பதித்தார். தமது கருத்துகளைத் தெளிவாக எடுத்துக் கூறும் திறன்படைத்த இவர் பிறரது எண்ணங்களுக்கும் உரிய மதிப்பளித்து, பாராட்டிப் பணிகளைப் பயன்படுத்திக் கொண்ட விதம் எல்லாரையும் கவர்ந்திருந்தது. மேலும் இவர் பல்வேறு விவாதத் தொடர்களையும் தலைமையேற்றுத் திறம்பட நடத்தினார்.

இந்நிலையில் 15 ஆண்டுகள் (1963 – 1978) திருத்தந்தையாகத் திறம்படப் பணியாற்றிய 262ஆவது திருத்தந்தை புனித ஆறாம் பவுல் 06.08.1978 அன்று இறையடி சேர்ந்தார். அதைத் தொடர்ந்து 263ஆவது திருத்தந்தையாக திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் பணி ஏற்றார். அவர் 33 நாள்களில் 28.09.1978 அன்று இறையடி எய்தவே புதிய 264ஆவது திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் அவசியம் உலகத் திருஅவைக்கு ஏற்பட்டது.

1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் நாள் 58ஆவது வயதில் போலந்து நாட்டைச் சேர்ந்த கரோல் வோய்த்திவா திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார். இது 455 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக் கத்தோலிக்கத் திரு அவையின் தலைமைப் பீடமான வத்திக்கானில் நடந்த புதுமையாகப் பேசப்பட்டது. ஏனெனில் இத்தாலியரே திருத்தந்தையாகத் தொடர்ந்து பொறுப்பேற்ற நிலையில் இத்தாலியைச் சாராத போலந்து நாட்டிலிருந்து இப்பொறுப்புக்கு ஒருவர் தேர்வு செய்யப்பட்டிருப்பது வியப்பாகவும் கருதப்பட்டது.

பல்கலைக்கழகம், குருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் பேராசிரியராகவும் முனைவர் பட்டம் பெற்றஅருள்பணியாளராகவும் ஆயராகவும் கர்தினாலாகவும் பணியாற்றிய காலமெல்லாம் இறைமக்களின் பல்வேறு அமைப்புகளின் தேவைகளை உணர்ந்தவர் என்ற அடையாளத்தோடு திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற கரோல் வோய்த்திவா தனது பெயரை 'இரண்டாம் யோவான் பவுல்' என்று வைத்துக்கொண்டார். அப்பப்பா, இந்த அற்புதப்பிறவி ஆற்றிய அரும் பணிகளையும் வாழ்ந்த வியத்தகு வாழ்வுமுறைகளையும் நாம் தொடர்ந்து அறிந்துகொள்வதில் எத்துணை இன்பம்!!

## ஆறாம் நாள்

### எழுத்துப் பணிகளில் இமயம் தொட்ட திருத்தந்தை

கவிதைகள் புனைந்து, காலத்திற்கேற்ற கருத்துகளை வெளிப் படுத்துபவராகவும், கட்டுரைகள் எழுதி இதயங்களை ஈர்ப்பவராகவும், நாடகங்கள் எழுதி, இயக்கி புத்துலகின் வித்தகராகவும் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் திரு அவையைச் செம்மைப்படுத்தத் தம் எழுத்துப் பணிகளைப் பயன்படுத்திக்கொண்டார் என்றால் அது மிகையன்று.

அவர் ஐந்து புத்தகங்களையும் 14 மறைக் கோட்பாட்டுத் தொகுப்புகளையும் 15 திருத்தூது ஆவணங்களையும் 11 திருத்தூது கட்டமைப்புக் கருத்தமைவுகளையும் 45 திருத்தூது மடல்களையும் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப வடித்துள்ளார். அவை அனைத்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றில் பலவற்றைத் தனியாகவும் சிலவற்றை அதற்கென வல்லுநர் குழுவினை அமைத்தும் தயாரித்து வெளியிட்டுள்ளார். அவை,

1. திரு அவையின் நிலைப்பாட்டை உணர்த்துபவையாகவும்
2. செயல்பாட்டு முறையில் பங்கெடுக்கத் தூண்டுபவையாகவும்
3. உலகிற்கும் திருஅவைக்கும் மனந்திறந்த செய்தி மடல்களாகவும்
4. சில முக்கிய நிகழ்வுகளின் ஆண்டு நினைவை வெளிப் படுத்துபவையாகவும்
5. வழிகாட்டுதல்களை உணர்த்துபவையாகவும் இருந்துள்ளன

என்று இறையியலார் கருதுகின்றனர். மொத்தம் 95 ஆவணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைமட்டும் அவற்றின் முக்கியத்துவம் கருதி சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

### *1. மனித குல மீட்பர்*

கிறிஸ்து கொணர்ந்த மீட்பையும் அதில் பங்குபெறுவதால் மனிதன் அடையும் மாண்பையும் உணர்த்தி, ஒவ்வொரு மனிதரும் மற்ற மனிதர்களின் மாண்பையும் தன்னுரிமையையும் மதிக்க வேண்டும் எனக் கற்பிக்கிறது.

### *2. இரக்கம் நிறைந்த இறைவன்*

கிறிஸ்து துன்புற்ற சிலுவையின் மேன்மையை அதிகம் உணர்ந்து கொள்வதன் மூலம் மனிதனின் மாண்பு மேன்மேலும் வளர்கிறது. இரக்க வாழ்வு ஓர் அழைப்பு; அதை தான் மட்டும் அனுபவித்தால் போதாது என்று உணர்ந்து பிறர்மட்டில் இரக்கம் காட்டவும் மனிதனை இது அழைக்கிறது. ஒருநாள் இறக்கப்போகின்ற நாம், இருக்கும்வரை இரக்கம் காட்ட வேண்டும்.நாம் இரக்கம் காட்டும்பொழுது அதனைப் பெற நாமும் தகுதியடைகிறோம் என்பதைத் தெரிந்து வாழவும் இது அழைக்கிறது.

### *3. மனித உழைப்பு*

உழைப்பு மனிதனுக்காக; மனிதன் உழைப்பிற்காக அன்று. சமூக நீதியை நிலைநாட்ட உதவும் கருவிகளாக இதில் 1. வேலை வாய்ப்புரிமை,

2. நீதியான ஊதியம் பெறும் உரிமை, 3. தொழிற் சங்கங்கள் அமைக்கும் உரிமை ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. உழைப்பு, ஓய்வு நாளைக் கடைபிடிப்பதன் மூலம் படைத்தவரான இறைவனை மனிதன் பின்பற்றுகிறான் என இது விளம்புகின்றது.

### 4. குடும்ப வாழ்வு

உலகப் புகழ்பெற்ற இந்த ஆவணம், சமூக நற்பண்புகளைக் கற்பிக்கும் கல்விக் கூடங்களாக குடும்பங்கள் விளங்குகின்றன என்றும் குடும்பம் – சமூகம் ஆகியவற்றின் உயர் பண்புகள் குறித்தும், அவற்றைப் பின்பற்ற வேண்டிய அவசரக் கடமை குறித்தும், செய்யத் தவறிய நன்மையின் இடைவெளியில் தீமை புகுந்துகொள்கிறது என்றும் விரிவாக பல எடுத்துக்காட்டுகளைக் கூறி குடும்பத்தின் மேன்மையை இதுவிளக்குகிறது.

### 5. இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்

தமது திருத்தந்தைப் பணிப் பொறுப்பின் முதலாமாண்டு நிறைவைக் குறிப்பிடும் விதத்தில் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலால் எழுதப்பட்ட இந்த ஆவணம் மறைக்கல்வியின் அவசியம், அதன்பொருள், அதைக் கற்பிப்போர் மற்றும் அதன் பயன் பற்றி விளக்குகிறது.

### 6. கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி (CCC) நூல்

1992இல் 2ஆம் வத்திக்கான் சங்கம் தொடங்கப்பட்டதன் முப்பதாம் (1962) ஆண்டின் நினைவாக எழுதப்பட்ட இந்த ஆவணம் பல இறையியல் வல்லுனர்களின் கூட்டு முயற்சியாகும். 2865 எண்களைக் கொண்ட இந்த ஆவணம் 4 பகுதிகளைக் கொண்டுள்ளது: 1. நம்பிக்கை அறிக்கை, 2. கிறிஸ்தவ மறைபொருளின் கொண்டாட்டம், 3. கிறிஸ்துவில் வாழ்வு, 4. கிறிஸ்தவ இறைவேண்டல் என்று பிரித்து விளக்கம் அளித்தாலும் இது மறைக்கல்விப் போதனை மட்டுமன்று. இது மறைக்கல்வியின் மூலநூலும் (Scource Book) ஆகும்.

### 7. தேசிய மறைக்கல்வியின் பொது ஆவணம்

இது மறைக்கல்விப் பணி மற்றும் வாழ்வு பற்றிய விதிகளின் விளக்கமாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது.

திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் பணியாற்றிய 26 ஆண்டுகள் மற்றும் 168 நாள்கள் அடங்கிய காலக்கட்டத்தில் அவர்

எழுதியவை மிக அதிகம். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவரது கருத்துகளை அறிந்து வாழ்வாக்க வேண்டியது நமது கடமையாகும்.

## ஏழாம் நாள்

### திருப்பயணத்தின் திருத்தந்தை

உரோமையின் ஆயர் என்ற முறையில் திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் 146 மேய்ப்புப் பணி ஆய்வு சந்திப்புகளும், 317 தார்மிக உறவுச் சந்திப்புகளும், 322 உரோமைப் பங்குகளில் சந்திப்புகளும் நிகழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இவர் 104 அனைத்துலகத் திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். இதன்மூலம் இவர் 129 நாடுகளுக்குச் சென்றுள்ளார். இவைபற்றி உலக நாடுகளும் ஊடகங்களும் அவ்வப்போது வியப்பை வெளிப்படுத்தியுள்ளன.

இவை தவிர உரோமையில் இவர் இருக்கும் ஒவ்வொரு புதன்கிழமையும் மதியம் மூவேளை இறைவேண்டல் வேளையில் பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து, அற்புதக் காட்சி தந்து, தொடர் மறைக்கல்வியினை அளித்து, சிறப்புச் செய்திகளைக் கொடுத்தது 1160 தடவைகள். அப்போது சந்தித்த மக்கள் ஏறத்தாழ 17.6 மில்லியன் சுற்றுலாப் பயணிகள். என்னே அவர்தம் சமூக அக்கறை! என்னே அவர்தம் மறைப்பணி ஆர்வம்! மாபெரும் யூபிலி ஆண்டாம் 2000ஆம் ஆண்டு மட்டும் 8 மில்லியன் மக்களைத் தனியாகச் சந்தித்து ஆசி வழங்கியுள்ளார்.

### இதயங்களை ஈர்த்த இந்தியப் பயணங்கள்

1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தனது பல பணிகளை உள்ளடக்கி இந்தியாவிற்கு வருகைதந்த திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்களை இந்திய மக்கள் நெஞ்சம் குளிர வரவேற்றனர். குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு 05.02.1986 காலை 11.00 மணிக்கு விமானம் மூலம் வந்தடைந்தார். விமான நிலையத்திலிருந்து நேராகத் தோமையார் மலைக்குச் சென்று, அங்குள்ள புனித தோமா சிற்றாலயத்தில் இறைவேண்டல் செய்தார். பின்னர் அங்கிருந்தபடியே சென்னைப் பெருநகரை பல திசைகளிலும் திரும்பி இறைவேண்டலுடன் தமது ஆசிகளால் நிரப்பினார். அங்கிருந்து இராஜாஜி மண்டபத்திற்குச் சென்று, பிற சமய–சபைத் தலைவர்களுடன் கலந்துரையாடினார். பின் சாந்தோம் புனித தோமாவின் கல்லறை அடங்கிய பேராலயத்திற்கும்

பேராயர் இல்லத்திற்கும் சென்று ஆசியளித்தார்; இறைவேண்டல் செய்தார். தொடர்ந்து மெரினா கடற்கரையில் இலட்சக்கணக்கில் வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களிடையே திருப்பலி நிறைவேற்றினார். அங்கு தமது ஆசியை அளித்தபோது மக்கள் மிகுந்த ஆர்ப்பரிப்போடு வரவேற்றனர். இந்தச் சந்திப்பை மக்கள் என்றும் தங்கள் நினைவுகளில் கொண்டுள்ளனர். அங்கிருந்து கேரளாவுக்கு புறப்பட்டுச் சென்றார். மீண்டும் 2002ஆம் ஆண்டு டெல்லிக்கு வந்து சென்றார். அது அரசுமுறைப் பயணமாகும். இப்படி இவர் அரசுமுறைப் பயணங்களையும் ஆன்மிக நெறிப் பயணங்களையும் குறிப்பாக மறைக்கோட்பாட்டு விளக்கப் பயணங்களையும் மனித மேம்பாட்டுக் கருத்துகளடங்கிய பயணங்களையும் அதுவரை எந்தத் திருத்தந்தையும் செய்திராத அளவுக்கு மேற்கொண்டு, சுமார் ஒரு இலட்சத்து அறுபத்தேழாயிரம் (1,67,000) கிலோமீட்டர்கள் பயணித்ததால் இவர் 'திருப்பயணத்தின் திருத்தந்தை' என அழைக்கப்படுகிறார்.

### ஈடிணையற்ற இளையோர் மாநாடுகள்

1984ஆம் ஆண்டு உலக இளையோர் தினத்தைத் தொடங்கியதிலிருந்து இவர் பல முக்கிய நாடுகளில் உலக இளையோர் மாநாடுகளை உற்சாகமாக நடத்தி வந்துள்ளார். அவற்றிற்கான நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதிலிருந்து எந்தெந்தக் கருத்துகளில் யார் யார் எப்படிக் கருத்துரை வழங்குவது என்பது குறித்து தாமே முன்னின்று விரிவான தயாரிப்புச் செய்தது இவர் இளையோர் மட்டில் எத்தகைய எதிர்நோக்கும் நம்பிக்கையும் கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக நாடுகளில் நடைபெறும் இம் மாநாடுகளுக்குச் சராசரியாக பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இளையோர் கூடியிருந்தது இளையோரது தாராளப் பங்களிப்பையும் ஈடுபாட்டையும் முழக்கமிட்டு அறிவிக்கின்றது. எல்லா மாநாடுகளுக்கும் தாமே நேரில் சென்று, தரமான,விரிவான கலந்துரையாடலை இருபால் இளையோர் மத்தியில் மேற்கொண்டது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வுகளாக இடம் பெற்றுள்ளன.

## எட்டாம் நாள்

### வரலாற்றுச் சாதனையாளர்; வத்திக்கான் சான்றாளர்

திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் தம் பணிக்காலத்தில் நிகழ்த்திய வரலாற்றுச் சாதனைகள் ஏராளம்.

அவற்றைப் பட்டியலிட்டு, சற்று விளக்கமாக இன்று தெரிந்து கொள்வோம்.

1. மன்னிப்பை வழங்கிய மாமனிதர்
2. சிறப்பு ஆண்டுகளை அறிவித்த சிந்தனையாளர் – ஒளியின் மறை உண்மைகளை வழங்கியவர்.
3. புனிதத்தை நேசித்து பலருக்கு புனிதர் பட்டம் வழங்கியவர்
4. சந்திப்புச் சாதனையாளர்
5. புதிய மறைமாவட்டங்கள், புதிய பணியாளர்கள் உருவாக்கம்,
6. திருஅவை சட்டத்திருத்தம் வெளியீடு

### *1. மன்னிப்பை வழங்கிய மாமனிதர்*

கிறிஸ்தவத்தின் தனித்தன்மை மன்னிப்பு வழங்குதல். இதனை நம் ஆண்டவர் இயேசுவே கல்வாரி மலையில் தம்மைச் சிலுவைச் சாவுக்குக் கையளித்தவர்களை, துன்புறுத்தியவர்களை மன்னித்து நமக்கு முன்மாதிரியாகவும் சான்றாகவும் திகழ்கின்றார். ஆண்டவரது போதனையைத் தம் வாழ்வின் சாதனை இலக்காகத் தெரிந்தெடுத்த திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் சிறப்பாகச் செயல்படுத்தினார்.

1981ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் உரோமை புனித பேதுரு சதுக்கத்தில் உரையாற்றிவிட்டு மக்களைச் சந்தித்துக் கொண்டே மக்கள் நடுவில் பவனி வருகையில் துருக்கி நாட்டைச் சேர்ந்த அகமது அலி அக்சா என்பவர் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டதில் நிலைகுலைந்து வீழ்ந்தார் திருத்தந்தை. உடல்நலம் மிகவும் சீர்குலைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்குப்பின் முழு நலம் பெற்றார்.மேலும் தன்னைச் சுட்டவர் அடைபட்டிருந்த சிறைக்குச் சென்று, அவருக்குத் தனது முழுமனத்துடன் கூடிய மன்னிப்பை வழங்கினார்.

100க்கும் மேற்பட்ட திருஅவையின் தவறான செயல்களுக்காக பகிரங்கமாக மன்னிப்புக் கோரியவர் நம் திருத்தந்தை. இதன்மூலம் மன்னிப்புக்கோருவதிலும் மன்னிப்பு வழங்குவதிலும் தாம் ஒரு ‘மாமனிதர்’ என்பதை எண்பித்தார்.

### *2. சிறப்பு ஆண்டுகளை அறிவித்த சிந்தனையாளர்*

திரு அவையின் பல நிலையினரும் புரிந்து உணர்ந்து செயல்பாட்டுடன் பங்கேற்கும் வண்ணம் 1. சிறப்பு வரலாற்று நிகழ்வுகள்,

2. புதிய படிப்பினைகள், 3. நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் தேவைகள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு சிறப்பு ஆண்டுகளைஅறிவித்து அவற்றைக் கொண்டாட வேண்டிய வழிகாட்டு முறைகளையும் அதனால் விளையும் பயன்களையும் அறிவித்தார். அதன்படி பல முக்கிய கருத்துகளுக்கான ஆண்டுகள் இடம்பெற்றன. அவைஒவ்வொன்றுமே வரலாற்றுச் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தவை. குறிப்பாக, 'மீட்பரின் ஆண்டு', 'மரியா ஆண்டு', 'நற்கருணை ஆண்டு', 'நம்பிக்கை ஆண்டு', 'மாபெரும் யூபிலி–2000', 'குருக்கள் ஆண்டு', 'புனித பவுல் ஆண்டு' மற்றும் 'செபமாலை ஆண்டு'. இந்த ஆண்டுகளைக் கொண்டாடும்போது கத்தோலிக்கத் திரு அவை எங்கும் சிறப்புச் செயல்பாடுகள் மற்றும் இறைவேண்டல்களால் புத்தெழுச்சி பெற்றது. இப்படி உருவாக்கப்பட்டதுதான் 2002ஆம் ஆண்டு அக்டோபரில் தொடங்கிய செபமாலை ஆண்டின் சிறப்புச் செயல்பாடான 'ஒளியின் மறை உண்மைகள்' அதற்கு முன் நடைமுறையில் இருந்த 1. மகிழ்ச்சியின் மறை உண்மைகள், 2. துயர்நிறை மறை உண்மைகள், 3. மாட்சிநிறை மறை உண்மைகள் ஆகியவற்றுடன் நான்காவதாக ஒளியின் மறை உண்மைகள் உருவாக்கப்பட்டன.

### 3. புனிதத்தை நேசித்து, அதற்கான பட்டங்களை வழங்கியவர்

திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் தம் வாழ்வில் புனிதத்தை நேசித்தார். அதுவே ஆன்மிக வாழ்வுக்கு அடிப் படையானது என்பதைப் போதித்தார். எனவே இவர்தம் பணிக் காலத்தில் நிகழ்த்திய 51 புனிதர் பட்டமளிப்புத் திருநிகழ்வுகள் வழியாக 1338 பேரை அருளாளர்களாகவும் 482 பேரைப் புனிதர்களாகவும் உயர்த்தியுள்ளார். இது இவருக்கு முன் ஐந்து நூற்றாண்டுகளாகப் பணியாற்றிய எல்லாத் திருத்தந்தையரும் அளித்த பட்டமளிப்புகளின் கூட்டு எண்ணிக்கையை விட அதிகம். இதிலிருந்து, மனித வாழ்வில் புனிதம் எவ்வளவு அவசியம் என்பதை அறியலாம்.

### 4. சந்திப்புச் சாதனையாளர் (பேரவை மாநாடுகள்)

இவர் தமது ஆட்சிக்காலத்தில் ஆயர் பேரவைகள் பதினைந்தினை நடத்தியுள்ளார். அவற்றில் ஆறு வழக்கமான ஒன்றுகூடல்களாகவும், ஒன்று அசாதாரண பேரவையாகவும்,எட்டு சிறப்பு அமர்வுகளாகவும் அமைந்திருந்தன. இந்தப் பேரவைகள் சிறப்புச் சந்திப்புகளாக அமைந்து திருஅவையைக் காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப வழிநடத்தும் சாத்தியக் கூறுகளை ஆராய்வனவாகவும் இருந்தன. ஏராளமான

அரசுத்துறைத் தலைவர்களை 738முறை அவர்களது அமைச்சர்கள் மற்றும் பிரதமருடன் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**5. புதிய மறைமாவட்டங்கள், புதிய இறை பணியாளர்கள் உருவாக்கம்**

திரு அவையின் சட்டங்களுக்கும் திட்டங்களுக்கும் ஏற்ப முழு மூச்சுடன் செயல்பட்டு, ஏராளமான புதிய மறைமாவட்டங்களை உருவாக்கியுள்ளார். 232 கர்தினால்களை உருவாக்கியுள்ளார். 6 முறை கர்தினால்களுக்கான திட்டமிடுதல் கூட்டங்களையும் நடத்தியுள்ளார். பேராயர்களுக்குப் பாலியம் என்ற அதிகாரப்பூர்வப் பட்டம் வழங்கும் போதும், மேய்ப்புப்பணி நிமித்தம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆயர்களைச் சந்திக்கும்போதும் அந்தந்த மறைமாவட்டச் செய்திகளைத் திரட்டிக்கொள்வது இவரது மேய்ப்புப் பணி சார்ந்த ஆர்வத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

**6. திருஅவை சட்டத் திருத்தம் வெளியீடு**

நெடுங்காலமாக நடைமுறையில் இருந்த திருஅவைச் சட்டங்களில் 1981ஆம் ஆண்டு நடைமுறைக்கு ஏற்ப மாற்றங்களைக் கொண்டுவந்து திருஅவைச் சட்டத் தொகுப்பை திருத்திய பதிப்பாக வெளியிட்டார்.

## ஒன்பதாம் நாள்

### மறைவும் மாட்சியும்

வல்ல செயல்களாலும் நல்ல தொடக்கங்களாலும் தனக்கென ஒரு தனி இடத்தை, தனி அணுகுமுறையை உருவாக்கிக்கொண்டு தன்னிகரற்ற இறைபணியாளராக கத்தோலிக்கத் திரு அவையை, 26 ஆண்டு காலம் வழிநடத்தி, இறை இரக்கத்தின் ஞாயிறு விழாவை நிறுவி அதன் சான்றாளராக விளங்கிய திருத்தந்தை புனித 2ஆம் யோவான்பவுல் இறை இரக்க ஞாயிறாகிய 02.04.2005 அன்று தனது 84ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் 08.04.2005 அன்று பன்னாட்டுத் தலைவர்களின் புகழாரத்துடனும் திருஅவைப் பணியாளர்கள் மற்றும் நம்பிக்கையாளர்களின் கண்ணீரஞ்சலியுடனும் புனித பேதுரு சதுக்கத்தில் அமைந்துள்ள புனித பேதுரு பேராலயத்தின் குகைக் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

### நிலையான மாட்சியை நோக்கிய புனித செயல்கள்

***அ. அருளாளர் பட்டம்***

பொதுவாக ஒருவர் இறந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவருக்கு புனிதர் பட்டம் அளிப்பதற்கான ஆராய்ச்சி, செயல்பாடுகள் தொடங்கும். ஆனால் புதிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலுக்கு புனிதர் பட்டம் வழங்கும் பணியைத் தொடங்க ஐந்து ஆண்டுகாலம் காத்திருக்கத் தேவையில்லை, நம்பிக்கையாளர்கள் இவரை விரைவிலேயே புனிதராகக் காண விரும்புகின்றனர் எனக் கூறி, அதற்கான பணிகளைத் தொடங்கலானார்; அதற்குரிய முறையான செயல்பாடு களுக்கு ஆணையிட்டார்.

***ஆ. அரிய சான்றாக அரும் அடையாளம் (புதுமை)***

2009இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கன்னியர் ஒருவர் தனக்கு ஏற்பட்ட பார்க்கின்சன் நோயிலிருந்து விடுபட திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலிடம் வேண்டிக்கொண்டார். அதன்படியே அவர் குணம் பெற்றார் என எண்பிக்கப்பட்டது. எனவே 2011ஆம் ஆண்டு மே முதல்நாள் அதே இறை இரக்க ஞாயிறன்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட், திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

***இ. புனிதர் பட்டம்***

திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலுக்கு அருளாளர் பட்டம் அளிக்கப்பட்ட சிலமணி நேரத்திலேயே அவரது பரிந்துரையால் மற்றோர் அரும் அடையாளம் (புதுமை) நடந்ததாகச் செய்தி வந்தது. கோஸ்தா ரிக்கா நாட்டைச் சேர்ந்த புளோரிபெத் மோரா என்ற பெண்மணிக்கு ஏற்பட்ட மூளை இரத்த அலற்சி (ஒவ்வாமை) அற்புதமான விதத்தில் மறைந்தது. இதற்கு விளக்கம் அளிக்க மருத்துவக் குழுவால் இயலவில்லை. இதனை ஆய்ந்த வத்திக்கான் பேராயம்,திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்களது பரிந்துரையால் நிகழ்ந்த அரும் அடையாளம் இது என ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டது.

2013ஆம் ஆண்டுஜுலை மாதம் 13ஆம் நாள் திருத்தந்தை பிரான்சீசு ஆணைப்படி, திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலுக்கு விரைவில் புனிதர் பட்டம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதுவரை புனிதர் பட்டம் பெறாமலிருந்த திருத்தந்தை 23ஆம் யோவானுக்கும் புனிதர் பட்டம் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**புனிதர் பட்ட சிறப்புக் கொண்டாட்டம்**

1963 ஆம் ஆண்டு இறப்பு எய்திய திருத்தந்தை 23ஆம் யோவானுக்கும் 2005இல் இயற்கை எய்திய திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலுக்கும் சேர்த்து ஒரே கொண்டாட்டமாக 2014ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள் இறை இரக்க ஞாயிறன்று புனிதர்பட்டம் வழங்கப்பட்டது.

இறை இரக்க ஞாயிறுக் கொண்டாட்டத்தை நிறுவிய திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இறந்ததும், அருளாளர் பட்டம் ஏற்றதும், புனிதர் பட்டம் பெற்றதும் இறை இரக்க ஞாயிறன்றுதான் என்பது பலராலும் வியந்து நோக்கப்பட்டது. இறைவன் நம்புனிதர்மீது கொண்ட இரக்கத்திற்கு இந்நிகழ்வுகளே மாபெரும் சான்றுகளாக உள்ளன.

இந்தக் கொண்டாட்டத்திற்கு இன்னும் ஒரு சிறப்பு குறிப்பிடத்தக்கது. அதாவது திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் அவரின் முன்னவர் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ஆகிய இருவரும் இணைந்தே திருப்பலி நிறைவேற்றி அக்கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த நாளில் புனிதராகும் இருவரில் ஒருவர் வரலாற்றுச் சிறப்புமிக்க 2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடங்கிய திருத்தந்தை புனித 23ஆம் யோவான். இன்னொருவர் ‘குடும்பங்களை ஆதரித்து வளர்த்த’ திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல்.

இவ்விழாக் கொண்டாட்டத்தில் 150 கர்தினால்களும் 700 ஆயர்களும் 1000–க்கும் மேற்பட்ட குருக்களும், பெருந்திரளான அருட்சகோதரிகளும் 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்களும் பங்கேற்றார்கள். உலக நாடுகள் 93 மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டன. 19 தூதுக்குழுக்கள் அதிபர்களின் தலைமையின் கீழும், 24 தூதுக்குழுக்கள் பிரதமர்களின் தலைமையின் கீழும் வருகைதந்தன. ஸ்பெயின் நாட்டு அரசரும் அரசியும் பெல்ஜியத்தின் முன்னாள் அரசியும் வந்து பங்கேற்று வியந்து போற்றினர்.

### திருவிழா, பாதுகாவலர் மற்றும் திருஉருவச் சிறப்பு

அனைத்துலக திருவழிபாட்டுப் பேராயம் அருளாளர், புனிதர் மற்றும் மறைச் சாட்சியரை ஒருநாளில் நினைவுகூர்ந்து விழாக் கொண்டாடுவது வழக்கம். அது பெரும்பாலும் அவர் இறந்த தேதியில் கொண்டாடப்படும். அதன்படி நம் புனிதர் திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுலுக்கு அவர் இறந்த ஏப்ரல் 2ஆம் தேதிக்குப் பதிலாக அவர் திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற நாளான அக்டோபர் மாதம் 22ஆம் நாளை அவரது விழாவாகக் கொண்டாடப் பணித்துள்ளது. மேலும் அவர் இளையோர் வாழ்வின் விடிவெள்ளியாகத் திகழ்ந்ததால் 'உலக இளையோர் நாளின் பாதுகாவலர்' என அழைக்கப்படுகிறார்.

### திருத்தந்தை புனித 2 ஆம் யோவான் பவுலின் திருஉருவச் சிலை

தொழிலதிபர் லெஸ்ஜெக் லைசனின் முழு நிதி உதவியுடன் போலந்து நாட்டில் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 45 அடி உயரமும் 5,000 கிலோ எடையும் கொண்ட திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களது திருச்சுருபம் நிறுவப்பட்டது. இது தான் நம் புனிதர் உருவில் அமைந்த உலகப் பெரும் சுரூபமாகும்.

### உலா வரும் ஒளியின் மைந்தர்

வரலாற்றையே வசீகரத் தலைமையால் ஈர்த்த திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுலிடம் விளங்கிய ஆற்றல்மிகு ஆசிகளும் அருங்குணங்களும் விடுமுறை விவிலியப் பள்ளியில் பயிலும் நமக்கும் நம் குடும்பங்களுக்கும் என்றும் துணை நிற்பனவாக!



## புனித வாழ்விற்கான சிறப்பான பரிந்துரைகள்


- எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பது.
- மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துவது.
- கொடுக்கப்பட்ட கடமைகளைச் சிறப்பாகச் செய்வது.
- இறைவன் என்னோடு எப்போதும் இருக்கிறார் என்ற இறை உணர்வில் வாழ்வது
- திருப்பலியில் ஒவ்வொரு நாளும் பங்கெடுப்பது.
- வரும் துன்பங்களை இறைவனது திருவுளம் என்று ஏற்றுக்கொள்வது.
- கடமையில் தவறி பணிகளைச் செய்யாமல், சாக்குப் போக்குச் சொல்லுவதிலிருந்து விடுபடுவது.
- திருவிவிலியத்தை அன்றாடம் வாசிப்பது.
- இறைவேண்டல்கள் செய்வது.
- செபமாலை செய்வது.
- பெற்றோர், பெரியோருக்கு கீழ்ப்படிந்து வாழ்வது.
- அடிப்படை ஒழுக்கங்களையும் நேர்மைத்தன்மையையும் கொண்டு பயணிப்பது. . .
- பிறர் பார்த்தாலும் பார்க்காதிருப்பினும் நல்ல செயல்களையே செய்வது.

## அறிந்து கொள்வோம், அனுபவிப்போம்...

- வெறும் கை என்பது மூடத்தனம்; விரல்கள் பத்தும் மூலதனம்.
- பூமியின் மிக மூத்த மொழி தமிழ்.
- எப்போதும் தமிழ் பேசுவோம். எப்போதாவது பிற மொழியும் பேசுவோம்.
- தண்ணீரைப் பயன்படுத்துவது நமது உரிமை. அதைச் சேமிப்பது நமது கடமை.
- பூமியின் பெரும் எதிரி நெகிழிதான் (பிளாஸ்டிக்), அதன் பயன்பாட்டை அடியோடு நிறுத்துவோம்.
- புத்தகங்களைத் துணை கொள்வோம்.
- உடலுழைப்பை அதிகரிப்போம்.
- சமூகம் புறக்கணித்தவற்றைக் கைவிடுவோம்
- குளிர் நீரில் குளித்து கொஞ்சமாய் சாப்பிடுவோம்.
- தியானம் கைகொள்வோம் ஆத்திரம் அகற்றுவோம்.
- இரவு உறங்கும் முன் சிறுதொலைவு நடப்போம்.
- உடுப்பில் வெள்ளை நிறத்தைப் பழக்கமாக்குவோம்.
- உணவில் கீரை சேர்த்துக்கொள்வோம்.
- எத்தனை வலித்தாலும் அழாமல் சிரிப்போம்.
- கேலிக்கு புன்னகை தருவோம்.
- கோபத்திற்கு விடைக் கொடுப்போம்.
- நட்பை நட்பு செய்வோம்.
- வேலை கற்றுத் தருபவரிடம் பணிவாக இருப்போம்.
- விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை. விதைக்துக்கொண்டேயிருப்போம். முளைத்தால் மரம், இல்லையென்றால் உரம்.
- நம்மை யாரும் அலட்சியப்படுத்தினால் விலகி நிற்போம்.
- அன்பு செய்தால் நன்றி சொல்வோம்.
- தன் மகிழ்ச்சிக்காக யாரையும் காயப்படுத்திருப்போம்.
- இதமாக பேசி இனிமையாக வாழ்வோம்.

அனைவருக்கும் நல்வாழ்த்துகள்

## திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுலை நோக்கி மன்றாட்டு



ஒ புனித யோவான் பவுலே! விண்ணகத்திலிருந்து உமது ஆசியை எங்கள்மீது பொழிந்தருளும். நீர் பெரிதும் அன்பு செய்த, பணிவிடை புரிந்த, இயேசுவை ஒவ்வொருவரிடமும் கொண்டு சேர்க்கவும், ஒவ்வொருவரையும் இயேசுவிடம் கொண்டு வந்து சேர்க்கவும் உலகப் பாதையில் மனத் துணிவோடு நீர் வழிநடத்திய திரு அவைக்கு ஆசியளித்தருளும். பற்றியெரியும் உம் பாசத்திற்குரிய இளையோர்க்கு ஆசியளித்தருளும். அவர்கள் மீண்டுமாய் கனவு காண அவர்களுக்கு உதவி புரியும். இந்த மண்ணக வாழ்வின் பாதைகளை ஒளிர்விக்கும் ஒளியைக் காண, விண்ணகத்தை அவர்கள் உற்று நோக்க அவர்களுக்கு உதவி புரியும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆசியளித்தருளும். இம் மண்ணகத்தில் கடவுள் ஏற்றிய விலைமதிப்பில்லாத, மிகவும் அவசியமான அந்த தெய்வீக ஒளிக்கு எதிரான சாத்தானின் தாக்குதல்கள் பற்றி நீர் ஏற்கெனவே எங்களை எச்சரித்திருக்கின்றீர். புனித யோவான் பவுலே, உம்முடைய பரிந்துரையால் ஒவ்வொரு குடும்பத்தையும், அதிலே மலருகின்ற ஒவ்வோர் உயிரையும் பாதுகாத்தருளும்.

பதட்டங்கள், போர்கள், நிறைந்த இந்த உலகத்திற்காக மன்றாடும் போரை எதிர்த்து நின்றீர். உரையாடலை ஊக்கப்படுத்தி, அன்பின் விதைகளை விதைத்தீர். தளரா நெஞ்சத்தோடு நாங்கள் அமைதிக்கான விதைகளை விதைப்பவர்களாக வாழ எங்களுக்காக மன்றாடும்.

ஒ புனித யோவான் பவுலே, விண்ணகத்தில் மரியா அருகில் நாங்கள் உம்மைப் பார்க்கிறோம். அங்கிருந்து இறையாட்சியை நிறைவாக எங்கள்மீது பொழிந்தருளும். ஆமென்.